## பிரிவு – 10

## உள்ளாட்சி மன்றங்களுக்கான புள்ளி விவரத் தகவல் அமைப்பு

**4.10.01.** 1992ம் ஆண்டு அரசியலமைப்பு 73 மற்றும் 74வது திருத்தச் சட்டங்கள்படி ஊரக மற்றும் நகர்ப் பகுதிகளில் பல்வேறு நிலைகளில் மேலும் வலுவான உள்ளாட்சி அமைப்புகளை ஏற்படுத்துவதற்கும், முடிவு எடுக்கும் அதிகாரங்களைப் பரவலாக்குவதற்குமான வழிமுறைகளை உருவாக்குவதற்கும், பங்கேற்புடன் கூடிய வளர்ச்சி மற்றும் உள்ளூர் நிலையில் இன்றியமையாத பணி முறையை திறமையான முறையில் செயல்படுத்துதல் ஆகியவற்றுக்கும் அடித்தளம் அமைக்கிறது. உள்ளாட்சி மன்றங்களின் திறமையான செயல்பாட்டிற்காகவும், மாநில அரசுகளும் மாநில நிதி ஆணையங்களும் இந்த உள்ளாட்சி அமைப்புகளின் நிதித் தேவைகளையும் நிதி வளங்களையும் தொடர்ந்து மதிப்பீடு செய்வதற்காகவும் இன்றியமையாத குறைந்தளவு தகவல்களுடன் கூடிய நம்பகமான, முறையான, நிலையான புள்ளி விவர மையம் ஒன்றை ஏற்படுத்துவது அவசியமாகும். தற்போது 'இம்மாநிலத்தில்' ஊராட்சிகள், நகராட்சிகள் அளவில் புள்ளி விவரங்களை சேகரித்து வைத்து வருவதற்கு சரியான படிவம் எதுவும் இல்லை.

**4.10.02.** தேசிய அளவில் அல்லது மாநில அளவில் புள்ளி விவரங்கள் இல்லாததால் உள்ளாட்சி நிறுவனங்களில் வரி விதிப்பு அம்சங்கள் குறித்த ஆராய்ச்சி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்பது அனைவரும் அறிந்ததே. பல நேர்வுகளில் இந்தப்புள்ளி விவரங்கள் ஒட்டு மொத்தமானவையாகத்தான் உள்ளன. நாடு முழுவதுமான நிலைமையை பிரதிபலிக்கின்ற புள்ளி விவரங்களை ஒருங்கிணைப்பதற்கு அவை தடையாக இருக்கின்றன. வேறு சில நேர்வுகளில் உள்ளாட்சி அமைப்பு நிதி வகையிலான புள்ளி விவரங்கள் உள்ளன. ஆனால் புள்ளி விவரங்களை பாதுகாக்க வேண்டிய அக்கறை மற்றும் ரகசியத் தன்மை காரணமாக அவற்றை வெளியிடுவதற்குத் தடையாக இருக்கும் கொள்கைகள் காரணமாக அவை கிடைப்பதில்லை. மேலும், இருக்கின்ற உள்ளாட்சி நிதி நிலை தொடர்பான புள்ளி விவரங்கள், நிருவாகம், வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளுக்காக திரட்டப்பட்டவை. இவை மூல வடிவிலேயே உள்ளன. இவற்றைப் பெருத்த இடர்பாட்டிற்கிடையேதான் அறிவியல் ரீதியில் பயன்படுத்தமுடியும். இதன் விளைவாக, உள்ளாட்சி மன்றங்கள் மூலம் செய்து கொடுக்கப்படும் பணிகளுக்காக எவ்வளவு செலவிடப்படுகிறது என்பதையும், ஒவ்வொரு பணிக்கும் எவ்வாறு நிதியுதவி அளிக்கப்படுகிறது என்பதையும் கண்டறிய முடியவில்லை. இந்திய அரசின், நகர்ப்பகுதி விவகாரங்கள் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் ஆதரவுடன், நகர்ப்பகுதி விவகாரங்கள் குறித்த தேசிய நிலையம், 1995 ஆம் ஆண்டில் ஹைதராபாத், டில்லி, முசோரி ஆகிய இடங்களில் ஏற்பாடு செய்திருந்த மாநில நிதி ஆணையங்களின் மூன்று கூட்டங்களில், நிலையான தரமான ஒப்பு நோக்கத்தக்க உள்ளாட்சி நிதி நிலை தொடர்பான புள்ளி விவரங்களின் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டது. சொத்து வரி, தொழில் வரி, தண்ணீர் தீர்வைகள், கட்டணங்கள், ஏனைய கேட்புத் தொகைகள் தொடர்பான விவரங்களை தானியங்கும் இயந்திரங்கள் (கணினி) மூலம் பெறும் வகையில், நகராட்சி அமைப்புகளில் தானியங்கு புள்ளிவிவர மையங்களை ஏற்படுத்துவது, நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களில் வருவாய் வசூல் பணியை மேலும் எளிமையாக்கி திறமையாகவும், அதிக சலிப்பூட்டாத வகையிலும் வரி வசூல் செய்ய உதவும். அதே சமயத்தில், இது தவறுக்கு வழியல்லாத ஒரு வரி வசூல் ஏற்பாடாகவும் அமையும். இது போன்ற

புள்ளிவிவர மையங்கள், திட்டங்களைச் செயல்படுத்தவும், திட்டச் செயல்பாட்டைக் கண்காணிப்பதற்கும் கடன்கள் குறித்த விவர அட்டவணைகளை எளிமையான முறையில் தயாரிக்கவும் உதவும்.

**4.10.03.** இவ்வாறாக (அ) உள்ளாட்சி மன்றங்களில் தரமான, முறைப்படுத்தப்பட்ட, முறைமை சார்ந்த புள்ளி விவர மையங்களை ஏற்படுத்துவதும் (ஆ) அலுவலர்களுக்கும், கல்வி நிலையங்களுக்கும் பொது மக்களுக்கும் கிடைக்கின்ற வகையில் இந்த உள்ளாட்சி மன்றங்களிலிருந்து குறைந்தளவு அடிப்படை புள்ளி விவரங்கள், மாநில அளவிலும் தேசிய அளவிலும் அமைந்துள்ள புள்ளி விவர மையங்களுக்கு முறையாக அனுப்பப்பட வேண்டியதும் அவசியமாகிறது.

**4.10.04.**

(i) உள்ளாட்சி நிதி நிலை தொடர்பான புள்ளிவிவரங்களுக்கு தேசிய அளவில் அமைப்பு ஏற்படுத்துவதற்கான அடிப்படைக் காரணம், நாட்டிலுள்ள உள்ளாட்சி மன்றங்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதற்கு இப்புள்ளி விவர ஆதாரங்கள் பெரிதும் உதவும் என்பதேயாகும். நிரந்தரமான மற்றும்/அல்லது குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை தற்காலிகமான அல்லது பகுதி பகுதியாக இங்கொன்று அங்கொன்றுமாக அல்லது தனித்தனியாக செய்யப்படும் வரி விதிப்பையும் புரிந்து கொள்ள உதவும் அல்லது ஆய்வு செய்யப்படும் பிரிவுகள் தங்கள் சூழ்நிலையாக அல்லது தாங்கள் பணிபுரியும் நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப ஒரே மாதிரியாக அல்லது வெவ்வேறு விதமாக எதிர் விளைவுகளை ஏற்படுத்துகின்றனவா என்பதை நிச்சயித்தறியவும் உதவும். இத்தகைய தகவல், மாநிலத்தில்/நாட்டில் உள்ள உள்ளாட்சி மன்றங்களின் செயல்திறனையும் தனித்தியங்கும் திறனையும் புரிந்து கொள்வதற்கு முக்கியமாகும். தேசிய, மாநில அளவிலான உள்ளாட்சி புள்ளி விவர மையங்களை ஏற்படுத்துவது ஏனையவற்கிடையே, பின்வரும் நோக்கங்களையும் எய்துவதற்கு உதவும்.

அ) உள்ளாட்சி நிலையில் கொள்கை வகுப்பதற்காக ஆதாரத்தை வலுப்படுத்தும்;

ஆ) அடுத்து வரும் மாநில நிதி ஆணையங்களின் தொழில் நுட்ப மற்றும் பகுப்பாய்வுத் திறனை அதிகரிப்பதற்கு வேண்டிய புள்ளி விவரங்களை அளிக்கும்;

இ) உள்ளாட்சி நிதிநிலை குறித்த ஒப்பு நோக்கு ஆய்வுக்கு உதவுவதுடன்உள்ளாட்சி மன்றங்களின் பலத்தையும் பலவீனத்தையும் தெரிந்து கொள்ள உதவி செய்யும்;

ஈ) உள்ளாட்சி மன்றங்களுக்கு உதவி செய்வதற்காக கொள்கைகளை வகுப்பதில் உதவக்கூடிய பயனுள்ள தகவல்களை மாநில அரசுக்கு அளிக்கும்.

உ) அடுத்து வரும் மாநில நிதி ஆணையங்களுக்கும், மாநில அரசுகளுக்கும் தொழில் நுட்ப பகுப்பாய்வுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் தனிப்பட்ட நபர்கள் மற்றும் நிறுவனங்களின் வருங்கால ஆராய்ச்சித் திறனை மேம்படுத்தும்.

ii) உள்ளாட்சி நிதி நிலை தொடர்பான புள்ளி விவரத் தகவல் மையத்தை ஏற்படுத்துவதால், பொதுவாக புள்ளி விவரங்களுக்கிடையே ஒப்பிட்டுப் பார்க்கும் தன்மையில் அதிக முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று கருதப்படுகிறது. இந்நோக்கத்தை எய்துவதற்காக, உள்ளாட்சி நிதி நிலை தொடர்பான புள்ளி விவரங்களின் அடியிற்கண்ட நான்கு முக்கியமான அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

அ) உள்ளாட்சி மன்றங்கள் வைத்து வரவேண்டிய குறைந்தபட்ச புள்ளி விவரங்களின் அளவு யாது?

ஆ) எந்த படிவங்களில் உள்ளாட்சி நிதிநிலை தொடர்பான புள்ளி விவரங்கள் வைத்து வரப்படவேண்டும்?

இ) உள்ளாட்சி நிதிநிலை தொடர்பான புள்ளி விவர ஆதாரங்களை மையப்படுத்துவதற்கும், கணினிமயமாக்குவதற்கும் என்ன நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்?

ஈ) உள்ளாட்சி நிதி நிலை தொடர்பான புள்ளி விவரங்களை பொதுமக்கள் பெறுவதற்கு என்ன நடைமுறை பின்பற்றப்படலாம்?

iii) ஊராட்சிகளும் நகராட்சிகளும் குறைந்தளவு புள்ளி விவரங்களை வைத்துவர வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. இதில், உள்ளாட்சி மன்றங்களின் வரவு செலவு, உள்ளூர் பகுதிகளில் அளிக்கப்பட்ட பணி அளவு விபரம் அடங்கும். மேலும் தகவல் மையத்தில் திறமைக் குறியீடு, வருவாய் திரட்டுவதற்கான முயற்சி, உள்ளாட்சி மன்றங்களின் நிதிகளைச் சமமாக்குவதற்கு மாநில அரசு பயன்படுத்தக்கூடிய குறியீடுகள் ஆகியவை குறித்த தகவல்கள் இருத்தல் வேண்டும். நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகளின் பொதுவான தன்மைகள் குறித்த சில புள்ளி விவரங்களும், புள்ளி விவர வங்கியில் வைத்து வரப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. இத்தகைய பொதுவான தகவல்களில் ஏனையவற்றிற்கிடையே மொத்த மக்கள்தொகை, ஆதி திராவிடர்/ பழங்குடியினர் மக்கள்தொகை, பரப்பு, எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை, சுகாதார மையங்களின் எண்ணிக்கை, பள்ளிகளின் எண்ணிக்கை ஆகியவை அடங்கும். ஊராட்சிகளைப் பொறுத்தமட்டில், பயிரிடப்பட்ட மொத்தப்பரப்பு மற்றும் பாசனமளிக்கப்பட்ட மொத்தப் பரப்பு பற்றிய விவரங்களும் புள்ளி விவர வங்கியில் இருக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

iv) உள்ளாட்சி மன்றங்கள் பின்வரும் குறைந்தளவு புள்ளி விவரங்களை வைத்து வரவேண்டும் என்பதை ஆணையம் ஏற்றுக்கொண்டது. இவை நாட்டில் தேசிய உள்ளாட்சி நிதிநிலை தொடர்பான புள்ளி விவரங்களுக்கு ஆதாரமாக அமையும்.

அ) தேசிய பொது நிதிக் கொள்கை நிறுவன (NIPFP) படிவங்களில் குறிப்பிடப்பட்டவாறான பெருந்தலைப்புகளின் கீழ் வரவு செலவு, பற்றாக்குறை/மிகை இருப்பு. நமது மாநிலத்தில் மாநில நிதி ஆணையம் இதனை அதன் வினாப்பட்டியிலேயே பின்பற்றியுள்ளது.

ஆ) உள்ளாட்சி மன்றங்களின் பல்வேறு வரி மற்றும் வரியல்லாத இனங்களைப் பொறுத்தமட்டில் கேட்பு, வசூல், நிலுவை விவரங்கள்

இ) வரி விதிப்பு வீதங்கள், தீர்வைகள், சாலைச் சுங்கம் ஆகியவற்றிற்கான ஆதாரங்கள்

ஈ) ஒவ்வொரு ஆண்டிலும் உருவாக்கப்பட்ட சொத்துக்கள்

உ) ஆண்டு வாரியாக அளிக்கப்பட்ட வசதிகள் மற்றும் அது தொடர்பான செலவு விவரங்கள்

ஊ) கடன்கள், செலுத்தப்பட வேண்டிய ஆனால் செலுத்தப்படாத தொகை, வருங்கால வைப்புநிதி மற்றும் ஓய்வூதியம் உட்பட பணியாளருக்கு அளிக்க வேண்டிய தொகைகள், வைப்பீடுகள், முன்பணங்கள் ஆகியவை குறித்து உள்ளாட்சி மன்றங்களின் பொறுப்புகள் மற்றும்

எ) அரசு வழங்கிய மானியங்கள்/வருவாய் நிலுவைகள், ஒப்படை வரிகள் குறித்து அரசிடமிருந்து வர வேண்டிய பாக்கித்தொகை, மாநிலத்தின் ஏனைய வருவாய்

v) மேற்கூறியவாறான குறைந்தளவு புள்ளி விவரங்களை விரிவான பதிவேடுகளில் உள்ளாட்சி மன்றங்கள் வைத்துவர வேண்டும். மேற்சொன்ன தகவல்கள், தற்போது உள்ளாட்சி மன்றங்கள் வைத்து வரும் நூற்றுக்கணக்கான பதிவேடுகளில் உள்ளன. தொகுப்பு மற்றும் பயன்பாட்டுக்கான புள்ளி விவரங்களை அளிப்பதற்குத் தேவைப்படும் முக்கியமான பதிவேடுகளை உள்ளாட்சி மன்றங்கள் வைத்துவர வேண்டும் என்று ஆணையம் கருதுகிறது.

vi) பணி சார்ந்த வகைப்பாட்டின் அடிப்படையில் உள்ளாட்சி மன்றங்கள் புள்ளி விவரங்களை வைத்து வர வேண்டும் என்று ஆணையம் கருதுகிறது. இதற்காக, நகராட்சிகளும் ஊராட்சிகளும் அவை செய்யும் பணியின் வகைப்படி புள்ளி விவரங்களை வைத்து வரவேண்டும். மவாட்ட பஞ்சாயத்துகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கான புள்ளி விவரப் படிவங்களும் பணி சார்ந்த வரைபாட்டின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்று ஆணையம் கருதுகிறது.

**4.10.05.** மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெற்று, செங்கல்பட்டு நகராட்சிக்காக நகர்ப்பகுதி தகவல் முறையை (URBAN INFORMATION SYSTEM - URBIS) உருவாக்குவதற்காக தமிழ்நாடு அரசு, நகர மற்றும் நாட்டுப்புற அமைப்புத் திட்டம் (Directorate of Town & Country Planning) 1980 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் முன்னோடி ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. நம்முடைய மாநிலத்தில் ஏனைய நகராட்சிகளுக்கு இதுபோன்ற புள்ளி விவரத் தகவல் மையத்தை ஏற்படுத்துவதற்கு மேற்சொன்ன இயக்கத்தின் முயற்சிகளைத் தொடர்ந்து முறையான தொடர் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்று தெரிகிறது. நகராட்சிகளுக்கு இதுபோன்ற தகவல் மையம் ஏற்படுத்தப்பட வேண்டும். மாநகராட்சிகளுக்கும் மாவட்டப் பஞ்சாயத்துக்களுக்கும் அந்தந்த நிகைளில், புள்ளி விவரத் தகவல் மையங்கள் அமைந்திருத்தல் வேண்டும். பேரூராட்சிகளுக்கு மவட்ட/ மண்டல அளவில் தகவல் மையங்கள் ஏற்படுத்தப்படலாம். ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களைப் பொருத்தவரை இம்மையங்கள் ஊராட்சி ஒன்றிய நிலையில் இருக்க வேண்டும்.

**4.10.06.** எனவே மாநில நிதி ஆணையம் பின்வருமாறு பரிந்துரைக்கிறது:-

(i) ஒவ்வொரு நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றத்திற்கும் அதாவது நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கும், நிருவாகத் திறமையை மேம்படுத்தும் ஓர் அம்சமாக நகர்ப் பகுதி புள்ளி விவரத் தகவல் அமைப்பு (URBIS)ஏற்படுத்துவது அவசியமாகும். செங்கற்பட்டு நகர் பகுதிக்கு ஒரு புள்ளி விவரத் தகவல் அமைப்பு ஏற்படுத்தியதைத் தொடாந்து ஏனைய நகராட்சிகளிலும் இத்தகைய

அமைப்புகள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படலாம். பேரூராட்சிகளில், பேரூராட்சி உதவி இயக்குநர்களின் அதிகார வரம்பையொட்டி மாவட்ட அளவில்/மண்டல அளவில் புள்ளி விவரத் தகவல் அமைப்பு ஏற்படுத்துதல் வேண்டும்.

(ii) இப்பணியில் முன்னேற்றத்தை நுணுக்கமாக கண்காணிப்பதற்கு தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகளும், வழிகாட்டுதல்களும் அளிப்பதற்காக வல்லுநர்கள், பயன்படுத்துபவர்கள் அடங்கிய சீரமைப்புக் குழுவை நகராட்சி நிருவாக இயக்ககத்தில்/ பேரூராட்சிகளின் இயக்ககத்தில் அமைக்கலாம்.

iii) நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களில் நகர் பகுதி தகவல் அமைப்பு ஏற்படுத்தப்படுவது போன்று ஊரகப்பகுதி தகவல் அமைப்பு (RURIS) ஏற்படுத்த வேண்டிய அவசியமாகும். ஊராட்சி நிலையிலும் ஊராட்சி ஒன்றிய நிலையிலும் கிடைக்கும் புள்ளி விவரங்களை ஒருங்கிணைப்பதற்காக ஊராட்சி ஒன்றிய நிலையிலும் மாவட்ட நிலையிலும் கணினிகளை அறிமுகப் படுத்துவதன் மூலம் மேற்சொன்ன இரு நிலைகளிலும் புள்ளி விவரத் தகவல் அமைப்புகளை ஏற்படுத்துதல் அவசியமாகிறது.

iv) மாவட்ட அளவில் முன்பே சேகரிக்கப்பட்டு "நிக்நெட்" (NICNET)ல் உள்ள புள்ளிவிவரங்களை வளர்ச்சிப்பணிகள் திட்டமிடலுக்கு பயன்படுத்திடலாம்

v) கணினிகள் செயல்படும் பணியின் முன்னேற்றத்தை நுணுக்கமாகக் கண்காணிப்பதற்குத் தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகளும், வழிகாட்டுதல்களும் அளிப்பதற்காக, துறைவல்லுநர்கள், பயன் படுத்துபவர்கள் அடங்கிய சீரமைப்புக் குழுவை ஊரக வளர்ச்சி இயக்ககத்தில் அமைக்கலாம்.

vi) ஊராட்சி ஒன்றிய, மாவட்டம், பஞ்சாயத்து, நகராட்சி, பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் மண்டலம் நிலைகளால் கணினி மயமாக்குவதற்கு ஏற்படும் மூலதனச் செலவுக்கு அரசே (ஒரே தடவை மட்டும்) மானியம் அளித்து உதவி செய்ய வேண்டும். பின்னர் இவற்றை அந்தந்த உள்ளாட்சி மன்றங்களே பராமரிக்கும். பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில், பராமரிப்புச் செலவை மாவட்டத்திலுள்ள/மண்டலத்திலுள்ள பேரூராட்சிகள் பகிர்ந்து கொள்ள வேண்டும்.